மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) முதல் (உ) வரை. கடலூருக்கருகில், புவியியல் ஆராய்ச்சித்துறை, கல்லாக உறைந்த மரங்கள் எதனையும் கண்டு பிடிக்கவில்லை. எனினும், தென் ஆற்காடு மாவட்டம், திருவக்கரைக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட கல்லாக உறைந்த மரக்கட்டை அமைந்துள்ள பகுதி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பூங்காவாக இந்தியப் புவியியல் ஆராய்ச்சித் துறையால் வேலியிட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. புவியியல் ஆய்வுகளுக்காக பண்டைக் காலத்தில் இருந்தவையும் கல்லாக உறைந்தவையுமான இந்த மரப் பகுதிகளில் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு அவை வேலியிட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

கொண்டைக்கடலை விநியோகம்

* 412 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு, வெளி மாநிலங்களிலிருந்து கொண்டைக்கடலை தற்போது இறக்குமதி செய்கின்றதா ?

(இ) அப்படி இறக்குமதி செய்யப்படும் கொண்டைக்கடலையை இங்குள்ள வணிகர்களுக்கு வழங்குவதில் கையாளப்படும் முறைகள் யாவை ?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Government Ration Shop, Gopalapuram

* 413 Q.—Thiru K. SUPPU : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the Government Ration Shop at Gopalapuram was looted on 21st August 1972; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி : (அ) 21–8–1972-ல் கோபால புரத்தில் உள்ள அரசு பங்கீட்டு பொருள் சில்லறை விற்பனைக் கடையில் ரூ. 9,524 ரொக்கம் வைத்திருந்த பெட்டி ஒன்று களவாடப்பட்டது. வேறு இழப்பு ஏதுமில்லை.

(இ) காவல் துறையினரிடம் புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது, ஒரு காவலாளி மீதும் சில்லறை விற்பனைக் கடையின் கண்காணிப்பாளர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப் பட்டுள்ளது.